**மகளிர் விரைவு அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

**முன்னிலை :** திருமதி. **ஜி.எம். வசந்தி,** எம். எல்.,
அமர்வு நீதிபதி, மகளிர் விரைவு நீதிமன்றம்,
நாகப்பட்டினம்.

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23–ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.77/2025**

CNR.NO.TNNG09-000087-2025

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எண்.2, நாகப்பட்டினம்
மு.ப.வ.எண்.38/2023)

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர்,<br>வெளிப்பாளையம் காவல் நிலையம்,<br>நாகப்பட்டினம்,<br>குற்ற எண்.110/2018. |
| எதிரிகள் | : | 1. ரேவதி, வயது 39/2025,<br>க/பெ. முகம்மது மெய்தீன்,<br>பச்சை பிள்ளையார் கோவில் தெரு,<br>வெளிப்பாளையம், நாகப்பட்டினம்.<br><br>2. ஸ்ரீராம் நிவாஸ், வயது 30/2025,<br>த/பெ. வெங்கடேஷ்,<br>எண்.13, சாட்டையப்பர் மேல வீதி,<br>நாகப்பட்டினம். (தற்போது எண்.25 ஹவுசிங் யூனிட்<br>காடம்பாடி, நாகப்பட்டினம்.)<br><br>3. பிரசாத், வயது 32/2015,<br>த/பெ. தமிழ்செல்வன்,<br>தர்மகோவில் தெரு, வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம்.<br><br>4. விஜயபாரதி (எ) ஒச்சி, வயது 29/2025,<br>த/பெ. கணேசன்,<br>எண்.7, மருந்து கொத்தல ரோடு,<br>நாகப்பட்டினம். |
| குற்றச்சாட்டுகள் | : | 1–ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.<br>2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது. |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் கூற்று | : | வனையப்பட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை. |
| நீதிமன்றத்தின் முடிவு | : | 1–ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. |
| தீர்ப்பு | : | (i) முடிவில், 1–ம் எதிரியின் மீதான இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகளின் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழான குற்றச்சாட்டுகள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், மேற்படி குற்றச்சாட்டுகளின் கீழ் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>ii) 1 முதல் 4 எதிரிகள் எழுதி கொடுத்த பிணைப்பத்திரத்தை மேல்முறையீடு தாக்கல் செய்யும் காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு நாகப்பட்டினம் அமர்வு நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து 16.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் திருமதி. எஸ். உமா அவர்களும், 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி.ஆர். நடேச ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், 4–ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ்.ஜெ. மோகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

**I. (1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இந்த வழக்கின் புகார்தாரர் கமலியா, வெளிப்பாளையம் காவல் சரகம், வெளிப்பாளையம் ஏ.டி.எம். காலேஜ் ரோடு கூக்ஸ் நகர் என்ற முகவரியில் வசித்து வருகிறார் என்றும், அவரது கணவர் சிவபாண்டியன் கூலி வேலை செய்கிறார் என்றும், வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.66/2018 ச/பி.413, 414, 468, 420 இ.த.ச. மற்றும் குற்ற எண்.67/2018 பிரிவு 399 இ.த.ச. வழக்குகளில் இதன் 1–வது எதிரி ரேவதியின் கணவர் பிளாக்கன் (எ) முகமது மெய்தீன் என்பவர் 22.03.2018–ஆம் தேதி வெளிப்பாளையம் காவல் நிலைய ஆய்வாளரால் கைது செய்யப்பட்டதற்கு சாட்சி 1 கமல்யாவின் கணவர் சிவபாண்டியன் தான் காரணம் என 1–வது எதிரி ரேவதி எண்ணிக்கொண்டு சிவபாண்டியன் மீது முன்விரோம் கொண்டு வந்துள்ளார் என்றும், இந்நிலையில் 23.03.2018–ஆம் தேதி 22.00 மணிக்கு வெளிப்பாளையம், காவல் சரகம் வெளிப்பாளையம் ஏ.டி.எம் காலேஜ் ரோடு கூக்ஸ் நகரில் இதன் சாட்சி 1 கமல்யா அவரது வீட்டில் இருந்தபோது, 1–ம் எதிரி ரேவதியின தூண்டுதலின் பேரில் 2–ம் எதிரி ஸ்ரீராம நிவாஸ், 3–ம் எதிரி பிரசாத் மற்றும் 4–ம் எதிரி ஒச்சி (எ) விஜயபாரதி ஆகிய மூன்று பேர்களும் கையில் அருவாளுடன் சாட்சி 1–ன் வீட்டு வாசலில் நின்று கொண்டு, சாட்சி 1–ன் கணவர் வீட்டில் இருப்பது தெரியாமல் சாட்சி 1–ஐ குச்சிக்காரி, தேவடியா என்னைக்கு இருந்தாலும் உன்னையும் உன் புருஷனையும் கொன்று புதைத்து விடுவோம் என்று கொலை மிரட்டல் செய்தும், சாட்சி 1–ன் கணவர் வெளியில் வந்து பார்த்தபோது, எதிரிகள் மூன்று பேரும் கையில் அருவாளுடன் நின்று கொண்டிருந்ததை, பார்த்து சாட்சி 1–ன் கணவர் சிவபாண்டியன் தன்னை கொலை செய்து விடுவார்கள் என்று உயிருக்கு பயந்து தப்பித்து ஓடியபோது, எதிரிகள் மூன்று பேர்களும் சாட்சி 1–ன் கணவரை கொலை செய்ய வேண்டும் என்று ஒத்த நோக்குடன், ஓடிய சாட்சி 1–ன் கணவரை பார்த்து செத்து தொலைடா என்று அவர்மேல் அருவாள்களை வீசி

எறிந்து கொலை செய்ய முயற்சித்து குற்றம் புரிந்துள்ளனர் என்றும், எனவே, 1–ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழ் வெளிப்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(2) எதிரிகளுக்கு வழக்காவணங்கள் வழங்கியது குறித்த விபரம்:**

மேற்சொன்ன குற்ற அறிக்கையின் பேரில், மு.நி.ப.வ.எண்.38/2023–ஆக நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, நாகப்பட்டினம், நீதிமன்றத்தில் வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு, எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 கு.வி.மு.ச. படி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 307–ன் கீழான குற்றமானது மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றமாக உள்ளதால், எதிரிகள் மீதான வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்காக, நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பிரிவு 209(அ) கு.வி.மு.ச. படி பணிந்து சமர்பிக்கப்பட்டு, எதிரிகள் மீதான இவ்வழக்கு அமர்வு வழக்கு எண்.77/2025–ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**(3) எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவுதல் மற்றும் குற்றச்சாட்டுக்கள் வனைதலின் விபரம்:**

1 முதல் 4 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் இருதரப்பும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய போதிய ஆதாரம் இருப்பதாக கருதி, 1–ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4

எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, 1 முதல் 4 எதிரிகளிடம் படித்துக்காட்டி, விளக்கிக்கூறி வினவ, பொய் வழக்கு என்று கூறினர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**II. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் விபரம்:**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.த.சா.ஆ1 முதல் அ.த.சா.ஆ6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ எதுவும் இல்லை.

**III. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:**

1) அ.சா.1, திரு. செல்வமணி, தனது சாட்சியத்தில், தான் தற்போது நிர்த்தனமங்கலம் போஸ்ட், செட்டிச்சேரி என்ற முகவரியில் குடியிருந்து வருவதாகவும், 1 முதல் 4 எதிரிகளை தெரியும் என்றும், தான் ஆட்டோ ஓட்டுநர் என்றும், சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை எதுவும் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

2) அ.சா.2, திருமதி. சத்யா, தனது சாட்சியத்தில், தான் தற்போது நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

3) அ.சா.3, திரு. சதீஷ்குமார் தனது சாட்சியத்தில், தான் தற்போது நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், 2 முதல் 4 எதிரிகளை தெரியும் என்றும், சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம்

அளித்துள்ளார்.

4) அ.சா.4, திரு. சுரேஷ் தனது சாட்சியத்தில், தான் தற்போது நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் குடியிருந்து வருவதாகவும், எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசரில் உள்ள சாட்சியின் முதல் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ 1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அ.சா.5, திரு. சிவப்பிரகாசம், காவல் ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி மாநகரம், கன்டோன்மேன்ட் காவல் நிலையத்தில், சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 23.04.2018–ம் தேதி வெளிப்பாளையம் காவல் நிலைய அலுவலில் இருந்தபோது, கமலியா, வயது 32, க/பெ. சிவபாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று, வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.U/s.110/2018, 147, 148, 109 294(b), 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், பின்னர், சம்பவம் இடம் சென்று சாட்சிகள் 1 முதல் 7 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், புகார் அ.த.சா.ஆ 2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 4 மற்றும் 5 என்றும், சாட்சியிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர், இவ்வழக்கின் எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும், குற்ற எண்.99/2018 கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்தை கைப்பற்றியும், பின்னர் வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்ணில் எதிரி ஸ்ரீராம் நிவாஸ் எதிரியை கைது செய்தேன் என்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தேன் என்றும், வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்த ஒச்சி (எ) விஜயபாரதியை இந்த வழக்கில் PT Warrant மூலம் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தேன் என்றும், மற்ற எதிரிகள்

முன் எதிர்பார்ப்பு பிணையில் சென்று விட்டார்கள் என்றும், பிறகு, அ.த.சா.ஆ 6–ன் படி சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன் என்றும், பின்னர், சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் 30.06.2018 அன்று 1–வது எதிரி மீது U/s.109, 294(b), 506(ii), 307 இ.த.ச. படியும், 2, 3, 4 எதிரிகள் மீது U/s.294(b), 506(ii), 307 இ.த.ச. படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**IV. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள விவரங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரிகளிடம் வினவியது குறித்த விபரம்:**

1 முதல் 4 எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் கீழ் எதிரிகளுக்கு விளக்கிக்கூறி கேட்டப்போது, 1 முதல் 4 எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

**V. தீர்வுக்குரிய பிரச்சினை:**

இவ்வழக்கில் 1–ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டுகள், அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலம் தகுநிலை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சினையாகும்.

**Vi. தீர்வு:–**

1) இவ்வழக்கில் 1–ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307 கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

2) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் தனது வாதுரையில், அரசு

தரப்பில் அ.சா.1 முதல் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ 1 முதல் அ.த.சா.ஆ 6 வரை குறியீடு செய்யப்பட்டிருப்பதாகவும், அத்தகைய சாட்சிய சான்றாவணங்களின்படி, 1 முதல் 4 எதிரிகளின் மீதான மேற்படி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே, 1–ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் வாதுரை செய்தார்.

3) ஆனால், கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் அவர்கள் தங்களது பதில் வாதுரையில், புகார்தாரரும், கண்ணுற்ற சாட்சி மற்றும் இதர சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்திருப்பதினாலும், அரசு தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மூலமாக, 1 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

4) மேற்படி இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது.

5) இவ்வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்துள்ள திருமதி. கமலியா ஆவார். மேற்படி கமலியா இவ்வழக்கு நிலுவையில் இறந்துவிட்டார். கண்ணுற்ற சாட்சிகளின் ஒருவரான, கமலியாவின் கணவரான சிவபாண்டியனும் வழக்கு நிலுவையில் இறந்துவிட்டார். இந்நிலையில் சம்பவத்தை கண்ணுற்ற மற்ற சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா3 வரை விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான திரு. செல்வமணி, தனது சாட்சியத்தில், 1 முதல் 4 எதிரிகளை தெரியும் என்றும், சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறிவிட்டதனால், மேற்படி அ.சா.1–ன்

சாட்சியத்தின் மூலமாக அவரது முந்தைய கு.வி.மு.ச.161(3) வாக்குமூல சங்கதிகள் நிரூபிக்கப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.1–ன் சாட்சியமானது 1 முதல் 4 எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் தொடர்பு படுத்துவதற்கு போதுமான சாட்சியமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

6) மேலும், சம்பவத்தை கண்ணுற்ற மற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்து பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதாலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சியங்களின் மூலமாக அவர்களது முந்தைய கு.வி.மு.ச.161(3)–ன் வாக்குமூல சந்திகளானது நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், அதேபோன்று பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு சம்மந்மாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.த.ஆ1 என்று சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டதாலும், அ.சா.4–ன் சாட்சியத்தின் மூலமாக அவரது முந்தைய கு.வி.மு.ச.161(3)–ன் வாக்குமூல சந்திகளானது நிரூபிக்கப்படவில்லை என்பதாலும், மேற்படி அ.சா.1 முதல் அ.சா.4–ன் சாட்சியங்களானது, குறிப்பாக கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியங்களானது எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் தொடர்பு படுத்துவதற்கு போதுமான சாட்சியமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

7) அடுத்ததா,க அ.சா.5 திரு. ட. சிவப்பிரகாசம் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி மாநகரம், கன்டோன்மேன்ட் காவல் நிலையத்தில், சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 23.04.2018–ம் தேதி வெளிப்பாளையம் காவல் நிலைய அலுவலில் இருந்தபோது, கமலியா, வயது 32, க/பெ. சிவபாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த

புகார் மனுவினை பெற்று, வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.U/s.110/2018, 147, 148, 109 294(b), 506(2)–ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், பின்னர், சம்பவம் இடம் சென்று சாட்சிகள் 1 முதல் 7 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், புகார் அ.த.சா.ஆ 2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 4 மற்றும் 5 என்றும், சாட்சியிடம் மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர், இவ்வழக்கின் எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும், குற்ற எண்.99/2018 கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்தை கைப்பற்றியும், பின்னர் வெளிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்ணில் எதிரி ஸ்ரீராம் நிவாஸ் எதிரியை கைது செய்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும், வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்த ஒச்சி (எ) விஜயபாரதியை, இந்த வழக்கில் PT Warrant மூலம் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், மற்ற எதிரிகள் முன் எதிர்பார்ப்பு பிணையில் சென்று விட்டார்கள் என்றும், பிறகு, அ.த.சா.ஆ 6–ன் படி சட்டப்பிரிவு மாற்றம் செய்ததாகவும், பின்னர், சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் 30.06.2018 அன்று 1–வது எதிரி மீது U/s.109, 294(b), 506(ii), 307 இ.த.ச. படியும், 2, 3, 4 எதிரிகள் மீது U/s.294(b), 506(ii), 307 இ.த.ச. படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்திருந்தாலும்கூட, மேற்படி காவல்துறை சாட்சியான அ.சா.5–ன் மூலமாக, இவ்வழக்கில் புலன் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக, அரசு தரப்பு புலன் விசாரணை குறித்து, இவ்வழக்கில் மேற்படி அ.சா.5 புலன் விசாரணை அதிகாரி இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தாலும்கூட, அரசு தரப்பின் வழக்கின்படி பாதிக்கப்பட்ட சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள புகார்தாரர் கமலியா

க/பெ. சிவபாண்டியன் வழக்கு நிலுவையில் இறந்துவிட்டபடியால், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 திரு. செல்வமணி சம்பவம் குறித்தும், சம்பவத்துடன் 1 முதல் 4 எதிரிகளை தொடர்புபடுத்தியும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதனாலும், பிறழ் சாட்சியாக மாறிவிட்டதாலும், அதேபோன்று சம்பவம் குறித்து இதர கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவம் குறித்தும், சம்பவத்துடன் 1 முதல் 4 எதிரிகளை தொடர்புப்படுத்தியும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதனாலும், பிறழ் சாட்சியாக மாறிவிட்டதாலும், அதாவது மிக முக்கியமான சாட்சிகளான அ.சா.1 முதல் 3 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினால், இவ்வாறான சூழ்நிலையில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5–ன் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு, மேற்படி 1 முதல் 4 எதிரிகளை வழக்கு சம்பவத்துடன் அறுதியிட்டு தொடர்புப்படுத்த இயலாது என்றும், ஆகவே 1 முதல் 4 எதிரிகள் மீதான அரசு தரப்பு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவிற்கு வந்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு வழங்கி, 1–ம் எதிரியின் மீதான இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து 1 முதல் 4 எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(i) முடிவில், 1–ம் எதிரியின் மீதான இ.த.ச. பிரிவுகள் 109, 294(பி), 506(2), 307 மற்றும் 2 முதல் 4 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(2), 307–ன் கீழான குற்றச்சாட்டுகள், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், மேற்படி குற்றச்சாட்டுகளின் கீழ் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

ii) 1 முதல் 4  எதிரிகள் எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு தாக்கல் செய்யும் காலத்திற்கு பின்னிட்டு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 23.07.2026–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.23 17:06:33 +0530

**அமர்வு நீதிபதி,**
**மகளிர் விரைவு நீதிமன்றம்,**
**நாகப்பட்டினம்.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா. 1 திரு. செல்வமணி
அ.சா.2 திரு. எஸ். சத்யா
அ.சா.3 திரு. சதீஷ்குமார்
அ.சா.4 திரு. பி. சுரேஷ்
அ.சா.5 திரு. சிவப்பிரகாசம்

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1 | 23.04.2018 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4–ன் கையொப்பம் (முதல் கையொப்பம்) உண்மை நகல். |
| அ.சா.ஆ 2 | 23.04.2018 | புகார் மனு அசல். |
| அ.சா.ஆ 3 | 23.04.2018 | முதல் தகவல் அறிக்கை அசல். |
| அ.சா.ஆ 4 | 23.04.2018 | பார்வை மகசர் உண்மை நகல். |
| அ.சா.ஆ 5 | – | மாதிரி வரைபடம் உண்மை நகல். |
| அ.சா.ஆ 5 | 23.04.2018 | பிரிவு மாற்று அறிக்கை அசல். |

**அரசுத்தரப்பு சான்று பொருள்:**

இல்லை.

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள்:**

இல்லை.

**எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:**

இல்லை.

G M VASANTHI

Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.23 17:06:44 +0530

**அமர்வு நீதிபதி,**
**மகளிர் விரைவு நீதிமன்றம்,**
**நாகப்பட்டினம்.**

அமர்வு நீதிபதி, மகளிர் விரைவு நீதிமன்றம்,
நாகப்பட்டினம்.
அமர்வு வழக்கு எண்.77/2025
தீர்ப்புரை / நேரிய/வரைவு.
நாள்: 23.07.2026.